அடையாள இலக்கம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| D | | | | | | |

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2023

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

# அதிமேற் பிரிவு

(12 – 14 வயதுப் பிரிவு)

நேரம்: 2 மணித்தியாலங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்

| | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

**(அ) கீழே தரப்பட்ட சொற்களைப் பிரித்து எழுதுக.**

1. ஆதரவற்றவன் : ____________________ + ____________________

2. உலகப்புகழ் : ____________________ + ____________________

3. ஒருவருக்கொருவர் : ____________________ + ____________________

4. பொன்னூஞ்சல் : ____________________ + ____________________

5. சேற்றுநிலம் : ____________________ + ____________________

(5 புள்ளிகள்) [ ]

**(ஆ) கீழே தரப்பட்ட சொற்களுக்கு எதிர்ப்பொருள் கொண்ட சொற்களை எழுதுக.**

1. அண்மை : ________________________________________

2. ஒற்றுமை : ________________________________________

3. தொடக்கம் : ________________________________________

4. இன்பம் : ________________________________________

5. இரவு : ________________________________________

(5 புள்ளிகள்) [ ]

**(இ) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் கோடிடப்பட்டுள்ள இடங்களில் பொருத்தமான சொற்களை எழுதி வாக்கியங்களைப் பூர்த்தி செய்க.**

1. ஔவையார் ஒரு ______________________________.
2. வரவுக்கு அதிகமாகச் ____________________ செய்தல் ஆகாது.
3. அழுத பிள்ளை ____________________ குடிக்கும்.
4. திராட்சைப் பழங்கள் கொத்துக் கொத்தாகக் காய்த்துத் ______________.
5. மழை பெய்தபோது மக்கள் வெளியே செல்ல _____________ பிடித்தனர்.
6. சில மாணவர்கள் கணக்குப்பாடம் மிகவும் கடினமானது என்று ____________________.
7. குருவிகள் தமது ____________________ குஞ்சுகளுக்கு இரையூட்டின.
8. மல்லிகை மலரின் ____________________ அனைவரையும் கவர்ந்தது.
9. தாய் தன் குழந்தையைக் கண்ணின் இமைபோல் _________________ வந்தாள்.
10. நாம் நமக்குச் சொந்தமில்லாத பொருளை அதற்கு உரியவரிடம் ____________________ வேண்டும்.

(10 புள்ளிகள்)

**(ஈ) கீழே தரப்பட்ட வாக்கியத்திலே கோடிட்ட சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிந்து அதன் கீழே கோடிடுக.**

1. தற்காலத்தில் **தகவல்களை** அளிப்பதில் பல சாதனங்கள் துணை புரிகின்றன.
   அ) இன்பத்தை ஆ) பொழுதுபோக்கை
   இ) சாதனைகளை ஈ) செய்திகளை
2. மனிதர்கள் தங்களுக்கு ஏற்படும் **களைப்பைப்** போக்க, கலையை நாடுகின்றனர்.
   அ) துன்பத்தை ஆ) தூக்கத்தை
   இ) சோர்வை ஈ) வலியை
3. முதியோரைப் **பேணுதல்** நமது கடமையாகும்.
   அ) காப்பாற்றுதல் ஆ) வைத்திருத்தல்
   இ) மகிழ்வித்தல் ஈ) பாராட்டுதல்
4. நாட்டுப் பற்றுடைய ஒவ்வொருவரும் பொதுத் தொண்டில் **பங்கெடுத்து** நாட்டிற்குச் சேவை செய்ய வேண்டும்.
   அ) உதவி ஆ) விலகி
   இ) பிரிந்து ஈ) கலந்துகொண்டு
5. அறிவுடன் அன்பும் **பணிவும்** மிக்க ஒருவரால்தான் வாழ்வில் உயர்வு பெறமுடியும்.
   அ) அடக்கமும் ஆ) இரக்கமும்
   இ) நம்பிக்கையும் ஈ) ஆர்வமும்
6. சாதுவன் பொருள் **ஈட்டுவதற்காகக்** கப்பலில் ஏறி அயல்நாடு சென்றான்.
   அ) செலவழிப்பதற்காக ஆ) காட்டுவதற்காக
   இ) சம்பாதிப்பதற்காக ஈ) உதவுவதற்காக
7. மறந்தும் பிறர்க்கு நாம் **தீங்கு** செய்யக் கூடாது.
   அ) நன்மை ஆ) சிறுமை
   இ) தீமை ஈ) கடுமை
8. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ செஞ்சிலுவைச் சங்கத்தின் குழு ஒன்று **ஆயத்தமாக** இருந்தது.
   அ) தயாராக ஆ) முனைப்பாக
   இ) வருவதாக ஈ) சுறுசுறுப்பாக
9. பிரபுவைப்போல் அதிவிவேகமுள்ள பிள்ளை இந்த **வையகத்தில்** வேறுயாரும் இருக்கமாட்டார்கள் என அவனது பெற்றோர் மகிழ்ந்தனர்.
   அ) நாட்டில் ஆ) நகரத்தில்
   இ) ஊரில் ஈ) புவியில்
10. பெரியோர் கூறும் அறிவுரைகளைச் **செவிமடுத்து** அதன்படி நடத்தல் நன்று.
    அ) சொல்லி ஆ) நடந்து
    இ) அணுகி ஈ) கேட்டு

(10 புள்ளிகள்)

**(உ) கீழே தரப்பட்ட ஒவ்வொரு சொல்லையும் பாவித்து அதன் பொருள் விளங்கக் கூடியதாகச் சரியான வசனம் அமைக்கவும்.**

1. ஒலி :________________________________________
2. ஒளி :________________________________________
3. நீலம் :________________________________________
4. நீளம் :________________________________________
5. பனி :________________________________________
6. பணி :________________________________________
7. கரை :________________________________________
8. கறை :________________________________________
9. மலை :________________________________________
10. மழை :________________________________________

(20 புள்ளிகள்)

**(ஊ) தரப்பட்ட பகுதியைக் கருத்தூன்றிப் படித்த பின்னர் கீழேயுள்ள கேள்விகளுக்குத் தகுந்த விடைகளைத் தருக.**

நட்பு என்பதை உணராதோரும் உளரோ? நட்பு என்பது ஒருவர் மீது ஒருவர் காட்டும் அன்பு மட்டும் அல்ல, அது மிகவும் புனிதமான உறவு என்றும் கூறலாம். ‘‘உயிர் கொடுப்பான் தோழன்’’, ‘‘உடுக்கை இழந்தவன் கை போன்றவன் தோழன்’’ முதலான மொழிகளையும் நாம் அறிவோம். வள்ளுவர் நட்பை மிகவும் சிறப்பாக வரையறுத்துள்ளார்,

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு

நட்பானது எங்கிருந்து உதிக்க வேண்டும் என்றும், எத்தன்மையதாய் இருக்க வேண்டும் என்றும் இதைவிட இரத்தினச் சுருக்கமாக யாராலும் கூறியிருக்க முடியாது.

நட்பானது காலம், இடம், நிறம், சாதி, மதம் என்பவற்றைக் கடந்து வரும் ஓர் உணர்வு. நட்பு பிரதியுபகாரத்தை எதிர்பார்க்காதது, வலுக்கட்டாயமாகத் தோன்றக் கூடியது அல்ல. அது இயல்பாகக் காரண காரியங்களின்றித் தோன்றவல்லது. ஆனால் அதையும் மீறி நல்லாரை நண்பர்களாய்த் தெரிவு செய்தலையே எல்லோரும் விரும்புகிறோம். ஆனால் நல்லார் என்பது யார் கண்ணோட்டமாக இருக்க வேண்டும்?

இங்கு தான் பிரச்சினை தொடங்குகிறது. பள்ளி செல்லும் மாணவர்கள், அதிலும் நம் நாட்டுச் சூழலில், பள்ளி சென்ற ஓரிரு வாரங்களிலேயே ஒருவருக்கொருவர் அறிமுகமாகிவிடுகின்றனர். அதே கொஞ்ச நாட்களுக்குப் பிறகு நட்பாய் தலையெடுக்கிறது.

தாம் தேர்ந்த நட்பிற்கு யார் உத்தரவையும் இவர்கள் நாடுவதில்லை. நட்பான பிறகு இவர்கள் உறவு வீட்டுக்குத் தெரிய வரும். ‘‘ஏன்டா அவனைப் பார்க்க கீழ்த்தரமானவனாக இருக்கிறான் அவனோடு நீயும் சேர்ந்து தீய பழக்கங்களுக்கு ஆளாகப் போகிறாயா?’’ என்று பெற்றோரின் புலம்பல் ஆரம்பித்துவிடும். ஏதாவது அசம்பாவிதம் நேருமின், ‘‘என் பிள்ளையைப் பற்றி எனக்குத் தெரியும் அவன் ஒரு போதும் இதைச் செய்திருக்க மாட்டான். எல்லாம் அவன் சகவாசத்தால் வந்த வினை’’, என்ற குற்றச்சாட்டு வேறு. இதில் வேடிக்கை என்னவென்றால் எல்லோருடைய பெற்றோரும் இதைத்தான் கூறுவர்.

அவர்கள் அறியத் தவறுவது யாதெனில் நட்பு என்ற கூட்டுணர்வு தனி மனித சக்தியைக் காட்டிலும் பிரம்மாண்டமானது என்பது. கர்ணன் பலம் படைத்தவன் தான், ஆனால் துரியோதணன் மீது கொண்ட நட்புத்தான் அவனைப் போர் முனையில் யானை பலங்கொண்டு பொருதச் செய்தது. நட்பு நல்லதாய் மட்டும் அமைய வேண்டும் என்று நாம் எதிர்ப்பார்ப்பது எவ்வளவு தவறு!

1. நட்பு எத்தன்மையதாய் விளங்குதல் வேண்டும் என்கிறார் வள்ளுவர்?

2. நட்பு என்பது யாது? அதன் இயல்புகள் இரண்டினை எழுதுக.

3. நம் நாட்டுச் சூழலில் பள்ளி நட்பு ஏன் வலுவாக இருக்கிறது?

4. பெற்றோர்கள் நட்புப்பற்றி எதை அறியத்தவறி விடுகின்றனர்?

5. கர்ணன் பாரதப்போரில் பொருதும் சக்திக்கு ஆதாரமாக இருந்தது யாது?

(10 புள்ளிகள்)

**(எ) கீழே தரப்பட்ட கவிதையை கருத்தூன்றிப் படித்த பின்னர் கீழேயுள்ள கேள்விகளுக்குத் தகுந்த விடைகளைத் தருக.**

அல்லும் பகலும் நல்ல
ஆர்வத்தோடு நீங்கள்
கல்வி கற்று நன்மை
கருதி வாழ வேண்டும்

இந்த உலகில் நீங்கள்
இயற்றும் தொண்டில் எல்லாம்
தந்தை தாயைப் பேணும்
தருமம் ஒன்றே பெரிது

கன்றை நினைத்தே உள்ளம்
கசியும் பசுவைப் போல
நன்றி புரிந்தார் தம்மை
நாமும் நினைக்க வேண்டும்

வித்துவான் க. வேந்தனார் (ஒழுக்கம் - கவிதையின் ஒரு பகுதி)

1. நீங்கள் எப்படி வாழவேண்டும் என்று கவிஞர் முதலாவது பாடலில் கூறுகின்றார்?

______________________________

______________________________

2. இந்த உலகில் பெரிய தருமம் என்று எதைக் கண்டீர்?

______________________________

______________________________

3. நமது வாழ்வில் யாரை நினைத்து வாழ வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது?

______________________________

______________________________

4. மூன்றாம் பாடலில் வந்த உவமையை விளக்குக.

______________________________

______________________________

______________________________

5. நமது வாழ்வு சிறக்க இங்கே நாம் செய்யவேண்டிய மூன்று நல்ல விடயங்கள் எவையென எழுதுக.

(15 புள்ளிகள்)

## (ஏ) கீழே தரப்பட்ட கட்டுரையையோ அல்லது கடிதத்தையோ தெரிவு செய்து 200 சொற்களுக்குக் குறையாது எழுதுக.

சமூக ஊடகங்கள் (social media) இளையர்களின் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்கள் பற்றி தமிழ்ச் சஞ்சிகை ஒன்றுக்கு கட்டுரை எழுதுக.

**அல்லது**

தமிழ்மொழி, தமிழ்க்கலாசாரம் என்பவற்றை குறைத்து மதிப்பிடும் உனது தோழன் / தோழிக்கு அதன் சிறப்புக்களை எடுத்துக் கூறும் வகையில் கடிதம் எழுதுக.

(25 புள்ளிகள்)